People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**05.2.2011**

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்**
**தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்**
**சென்னை 600 009**

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு**

**மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.**

**மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 15 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.**

**எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 01.2.2011 முதல் 4.2.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.**

**1-2-2010 முதல் 4-2-2010 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | – |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | – |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 24 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 5 |
| 5. | வகுப்பறை வன்முறை | 3 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 3 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 6 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | 2 |
| 9. | கொத்தடிமை | – |
| 10. | பெண் சிசு கொலை | – |
| 11. | குழந்தை திருமணம் | – |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 9 |

| | | |
|---|---|---|
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | – |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | – |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | – |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | 2 |
| 17. | மணல் கொள்ளை | – |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | – |
| 19. | பொதுவானவை | 1 |
| | மொத்தம் | 55 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்



(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்:

தமிழகத் துணை முதல்வர்

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

## தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் – தொகுப்பு-5
## 1. 2.2010 முதல் 4. 2.2010 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 337. | 01.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை அவனியாபுரம் ஜெயபாரத் குடியிருப்பைச் சேர்ந்த ராதாகிருஷ்ணன்(36) அரசு மருத்துவமனை மருத்துவர், மனைவி ரேணுகாதேவி(32) இவர் பொன்னகரம் இ.எஸ்.ஐ., மருத்துவமனை மருத்துவர். கணவன் மனைவி குடும்ப தகராறில் கணவர் தாக்கியதாக சிகிச்சை பெற்றுவரும் ரேணுகாதேவி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 338. | 01.2.2011 | **கடலூர் மாவட்டம்:** கடலூர் குறிஞ்சிப்பாடி அடுத்த ஆயிப்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த பழனி மகள் பிரியா(20)வுக்கு. வடலூர் அடுத்த சந்தை வெளிப்பேட்டையைச் சேர்ந்த கலியபெருமாள் மகன் ஜெயசீல (28)க்கும் நடக்க இருந்த திருமணத்தின்போது மாப்பிள்ளை ஜெயசீலன் மாயமானார். இந்நிலையில் எம்.பி.ஏ., கல்லூரி மாணவர் கண்ணாதாசனுக்கும் பிரியாவுக்கும் திருமணம் நடந்தது. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 339. | 01.2.2011 | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றம் தேவி நகரைச் சேர்ந்த செல்வி(30) டி.பி.கே., ரோடு நத்தவனம் தெருவைச் சேர்ந்த சார்லஸ்(28) இருவரும் காதலித்துத் திருமணம் செய்தனர். திருமணத்திற்குப் பின் தாயார் லூர்துமேரி பேச்சை கேட்டு சார்லஸ் வரதட்சணை கொடுமை. செல்வி புகார் கொடுத்தும் காவலர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என செல்வி கோர்ட்டில் மனு. | பெண்கள் மீதான வன்முறை & வரட்சணைக் கொடுமை | தினத்தந்தி |
| 340. | 01.2.2011 | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகர் நரிக்குடி அருகேயுள்ள தாமரைக்குளம் கிராமத்தில் திருமாவளவன் படம் போஸ்டரை | தலித்துகள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஒட்டியதற்காக இருதரப்பினரிடையே கல்வீச்சு மற்றும் மோதல். 4 பெண்கள் உள்பட 5 பேர் காயம். இதில் 10 வீடுகள் சேதம். ஒரு கடைக்கு தீ வைக்கப்பட்டது. | | |
| 341. | 01.2.2011 | **தேனி மாவட்டம்:** போடி அருகே மேலச் சொக்கநாதபுரத்தைச் சேர்ந்த பாலா(22) மனைவி கவிதா(19). திருமணமாகி 3 மாதங்களே ஆன நிலையில் கவிதாவை காணவில்லை. கவிதாவை அதே பகுதியைச் சேர்ந்த செல்வம்(25) கடத்திச் சென்றதாக பாலா புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தமிழ்சுடர் |
| 342. | 01.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** கல்லல் அருகே சின்ன நாச்சியார்புரத்தைச் சேர்ந்த மருதுபாண்டியர்(55) மனைவி உஷா(28). கணவன் மனைவி தகராறில் உஷா கோபித்துக் கொண்டு பொய்யாலூரில் உள்ள தாய் வீட்டிற்கு வந்தார். ஆத்திரமடைந்த மருதுபாண்டியன் உஷாவை வெட்டிக் கொலை செய்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | ஆனந்தகுமார் |
| 343. | 01.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை தேவகோட்டை தாலுகாவைச் சேர்ந்த ராஜா மனைவி அமுதா(28). திருமணமாகி 3 வருடங்கள் ஆன நிலையில் சமையல் செய்யும்போது தீ பிடித்து அமுதா இறந்ததாக புகார். மகளின் மரணத்தில் மர்மம் இருப்பதாக அமுதாவின் பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை | ஆனந்தகுமார் |
| 344. | 01.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை பையூர் பலம்மலைநகர் நரிக்குறவர்களுக்கு அரசு சார்பில் கட்டிக் கொடுத்த வீட்டின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் முருகன் படுகாயம். வீட்டின் மேற்கூரை மோசமாக இருப்பதாக ஆட்சியாளரிடம் மனு கொடுத்தும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என முருகன் புகார். | ஊழல் | ஆனந்தகுமார் |
| 345. | 01.2.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** திருக்கோவிலூர் தாலுகா, சோழபாண்டிபுரம் கிராமத்தில் வசிக்கும் கதிர்வேல்(40) மனைவி பார்வதி(35). பார்வதியை பொது | பெண்கள் மீதான வன்முறை | ஜெயராமன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இடத்தில் நிர்வாணப்படுத்தி துன்புறுத்தியதாக கணவர் கதிர்வேல் மீது பார்வதி புகார். | | |
| 346. | 01.2.2011 | **கடலூர் மாவட்டம்:** பண்ருட்டி வட்டம், காட்டுகூடலூர் கிராமத்தைச் சேர்ந்த மாயவன் மகள் குறிஞ்சி. அதே பகுதியில் வசிக்கும் வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த வெங்கடேசன் பொது இடத்தில் சாதி பெயரைச் சொல்லி தாக்கியதாக குறிஞ்சி புகார். | தலித்துகள் மீதான வன்முறை | ஜெயராமன் |
| 347. | 01.2.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** கன்னியாகுமரி திருவிளைநகர் ஆதிலிங்கம் மனைவி சுமதி. சுமதியை அடித்துக் கொன்று கால்வாயில் வீசியதாக கணவர் ஆதிலிங்கம் மீது புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | ஜயப்பன் |
| 348. | 01.2.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை அம்பை தாலுகா, வி.கே.புரம் அருகே இருதயகுளம் கிறிஸ்தவ கொடி ஆலயம் பிரச்சனை தொடர்பாக இந்து, முன்னணி, கிறிஸ்தவர், காவல்துறையினரிடையே மோதல். மோதலில் இந்திராவும், உதவி ஆய்வாளர் காளியப்பன் காயம். பங்கு தந்தை அந்தோணி சேவியர் உட்பட 25 பேர் மீது வழக்கு. | பெண்கள் மீதான வன்முறை & மோதல் | S. கணேசன் |
| 349. | 01.2.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** கன்னியாகுமரி மாவட்டம், தின்னாங்கோடு மாணவி ஆஷாவை ஆட்டோவில் கடத்தல். | குழந்தைகள் மீதான வன்முறை | ஜயப்பன் |
| 350. | 01.2.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** கன்னியாகுமரி விளவன்கோடு வட்டம், கருங்கல் அருகே அடிகோட்டில் சார்பு ஆய்வாளர் யோவன் என்பவர் வாலிபரை தாக்கிய சம்பவத்தில் பொது மக்கள் போராட்டம். | காவல் நிலையச் சித்திரவதை | ஜயப்பன் |
| 351. | 01.2.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** விழுப்புரம் சங்கராபுரம் அரசு பெண்கள் பள்ளியில் படிக்கும் மாணவியிடம் தலைமையாசிரியர் கிருஷ்ணன் பாலியல் தொந்தரவு கொடுத்ததாக மாணவிகள் புகார். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை & வகுப்பறை வன்முறை | ஜெயராமன் |
| 352. | 2.2.2011 | **சென்னை மாவட்டம்:** வியாசர்பாடி எம்.கே.வி நகரைச் சேர்ந்த மேனகா(70) தனது | முதியவர்கள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மகன், மகள் ஆதரவுன்றி மாநகராட்சி பூங்காவின் பம்பிங் நிலையத்தில் தங்கியிருந்தார். மூர்த்திங்கர் தெருவைச் சேர்ந்த புரோக்கர் குமார்(40) குடிபோதையில் மூதாட்டியிடம் சில்மிஷம் செய்தபோது மூதாட்டியின் அலறல் கேட்டு அக்கம் பக்கத்தினர் குமாரை பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். | | |
| 353. | 2.2.2011 | **சென்னை மாவட்டம்:** பெரம்பலூர் காட்பாடியைச் சேர்ந்த அரிகிருஷ்ணன்(26). வியாசர்பாடி குற்றப்பிரிவு காவலில், காவல் நண்பர்கள் குழுவில் இருந்து வந்தார். தானும் காவலர் என கூறி பலரிடம் லஞ்சம் வாங்கியதாக அரிகிருஷ்ணன் மீது புகார். | லஞ்சம் | தினகரன் |
| 354. | 2.2.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** பெரம்பூர் சிறுவள்ளுவர் ரோடு பகுதியில் ஆதரவற்றோர் விடுதி உள்ளது. இங்கு தங்கிப் படிக்கும் 6 வயது சிறுமியை. வேன் டிரைவர்கள் ஜான்பால்(25). பிரகாஷ்(34) சிறுமியிடம் பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றதாக இருவர் மீது விடுதி நிர்வாகி விஜயபானு புளியந்தோப்பு துணை கமிஷ்னரிடம் புகார். | குழந்தை மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 355. | 2.2.2011 | **பொள்ளாச்சி மாவட்டம்:** பொள்ளாச்சி கோலார்பட்டியைச் சேர்ந்த செல்லம்மாள் மகள்கள் நாச்சம்மாள் சாவித்திரி. சொத்து தகராறில் நாச்சம்மாளின் கணவர் கண்ணப்பன், சாவித்திரி மீது மண்ணெண்ணெயை ஊற்றி கொழுத்தியதில் சிகிச்சை பலனின்றி சாவித்திரி மரணம். கண்ணப்பன் கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |
| 356. | 2.2.2011 | **ஈரோடு மாவட்டம்:** சத்தியமங்கலம் வடக்குபேட்டை அண்ணாநகரில் வசிப்பவர் வினோத்குமார் மனைவி கோமதி(27). கணவன் மனைவி குடும்பத் தகராறில் தாய் வீட்டிற்கு வந்தார் கோமதி. பின்னர் தாய் வீட்டில் இருந்து கணவர் வீட்டிற்கு சென்ற 8 நாளில் | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கோமதி தூக்குப் போட்டுத் தற்கொலை. தனது மகளின் சாவில் மர்மம் இருப்பதாக கோமதியின் தந்தை புகார். | | |
| 357. | 2.2.2011 | **ஈரோடு மாவட்டம்:** கோபி முதியனூரைச் சேர்ந்த குருசாமி மகன் ராமன்(14). இவர் கொடி வேரி பகுதியிலுள்ள அரசு உதவி பெறும் பள்ளியில் விடுதியில் தங்கி 9ம் வகுப்பு படித்து வந்தார். 26 தேதி விடுமுறைக்கு வீட்டிற்கு செல்வதாக சென்ற மாணவன் ராமனை காணவில்லை என புகார். | மாணவர் மாயம் | தினகரன் |
| 358. | 2.2.2011 | **மதுரை மாவட்டம்:** சோழவந்தான் அருகே மண்ணாடிமங்கலம் ஊராட்சி, கண்ணுடையாள்புரத்தைச் சேர்ந்த முத்தையா(30) மகன் சிவா(7). சிவாவிற்கு வயிற்றுப்போக்கு ஏற்பட்டு சோழவந்தான் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மருத்துவர்கள் இல்லாததால் ஊழியர்கள் சிகிச்சை அளித்ததால் சிறுவன் சிவா இறந்ததாக புகார். | அரசு மருத்துவமனை மருத்துவர்கள் அலட்சியம் | தினமலர் |
| 359. | 2.2.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் மாலப்பட்டியைச் சேர்ந்த பாலாஜி(16) பத்தாம் வகுப்பு படித்த பாலாஜியை காணவில்லை என புகார். திண்டுக்கல்லில் இருந்து பீகாரில் உள்ள போர்வெல் நிறுவனத்தில் விற்கப்பட்ட சிறுவர்கள் பாலாஜி, மற்றும் சையது வசிம்(14) இருவரையும் காவலர்கள் மீட்டனர். மாணவர்களை கடத்தி விற்ற புரோக்கர்கள் நாகராஜ்(47) ரங்கசாமி(45) கைது. | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 360. | 2.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை சாப்படூரைச் சேர்ந்த மகேந்திரன் மகள் நந்தினி(21) அதே பகுதியைச் சேர்ந்த சுரேஷ்(25) இருவரும் காதலித்துத் திருமணம் செய்தனர். சுரேஷ் ஏமாற்றியதால் மனமுடைந்த நந்தினி தன் தாயுடன் விஷம் குடித்துத் தற்கொலை. கிராம மக்கள் சாலை மறியல். | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 361. | 2.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை எஸ்.ஆர்.பி.சுரேந்திர நகரைச் சேர்ந்த குமரவேலு(38) மனைவி சிவப்பிரியா(31). கூடுதல் வரதட்சணைக் தராததால் குமரவேலு இரண்டாவது திருமணம் செய்ததாக சிவப்பிரியா புகார். குமரவேலு கைது. | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தமிழ்சுடர் |
| 362. | 2.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை பொன்னகரம் 3வது தெருவைச் சேர்ந்த ஜெயக்குமார் மகள் ஜெனிபர்மேரி(23). போடியகவுண்டன்பட்டியைச் சேர்ந்த குணசீலன்(27). இருவரும் காதலித்துத் திருமணம் செய்தனர். திருமணமாகி 4 நாட்கள் ஆன நிலையில் குணசீலன் வாழ மறுத்ததாக ஜெனிபர்மேரி புகார். குணசீலன் கைது . | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 363. | 2.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை புதுமாகாளிப்பட்டியைச் சேர்ந்த ராதாகிருஷ்ணன் மகள் மகேஸ்வரி(30)யை அதே பகுதியைச் சேர்ந்த ஆட்டோ டிரைவர் அப்பாஸ்(31) மானபங்கம் செய்ய முயன்றதாக மகேஸ்வரி புகார். அப்பாஸ் கைது. | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 364. | 2.2.2011 | **கடலூர் மாவட்டம்:** பண்ருட்டி சத்தியமூர்த்தி நகரைச் சேர்ந்த சிவக்குமாரின் மனைவி மல்லிகா(30). உங்கள் கணவரை பிடித்துவைத்திருக்கிறோம் உங்களை விசாரிக்க வேண்டும் என திண்டிவனம் காவலர்கள் மல்லிகாவை காவல் நிலையம் அழைத்துச் சென்று நிர்வாணப்படுத்தி சித்திரவதை. விசாரணைக்குப் பின் வழக்கில் கைது செய்யப்பட்டவரின் மனைவி மல்லிகா இல்லை என தெரிந்தது. | பெண்கள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 365. | 3.2.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை பாளையங்கோட்டை தாலுகா, மனகாவலம் பிள்ளை நகர் பகுதியைச் சேர்ந்த சரவணன்(28). கொக்கிரகுளம் தேவி மருத்துவமனையில் தவறான சிகிச்சையால் சரவணன் மரணம். பொதுமக்கள் போராட்டம். | மருத்துவர்கள் அலட்சியம் | S.கணேசன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 365. | 3.2.2011 | **சென்னை மாவட்டம்:** விருகம்பாக்கம் காமராஜர் சாலையில் வசிக்கும் அனந்தாச்சாரி மனைவி சாந்தாமணி(72). தனியாக வீட்டில் இருந்த சாந்தாமணியை மர்ம நபர் கத்தியால் கழுத்தை அறுத்து அவர் அணிந்திருந்த நகை கொள்ளை. சிகிச்சை பெற்றுவரும் சாந்தாமணி புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி | தினகரன் |
| 366. | 3.2.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** கும்மிடிப்பூண்டி குருவிக்கரம் காலனியில் வசிக்கும் முனியம்மாள்(40). தனது வீட்டில் ரேசன் அரிசி பதுக்கி வைத்திருப்பதாகப் புகார். அதிகாரிகள் சோதனையில் ஆந்திராவுக்குக் கடத்த இருந்த 1,600 கிலோ ரேசன் அரிசி பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |
| 367. | 3.2.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** காஞ்சிபுரம் ரயில் நிலையத்திற்கு ஆர்.பி.எப் காவலர் ஆரோக்கியசாமி பணிக்கு போதையில் வந்ததோடு பணியில் இருந்த சிக்னல் ஊழியர் மஞ்சுளாவிடம் தகராறு செய்து அடித்ததாக சிகிச்சை பெற்றுவரும் மஞ்சுளா ஆரோக்கியசாமி மீது புகார். | பெண்கள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 368. | 3.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை சரவணம்பட்டி சிவானந்தபுரத்தைச் சேர்ந்த செல்வராஜ் மகள் அரங்கநாயகி (எ) மாலா(14) சவுந்தராஜ் மகள் சாஜிதா(14) பள்ளி சென்ற இருவரையும் காணவில்லை என பெற்றோர் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 369. | 3.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை சிங்காநல்லூர் நீலிக்கோணம்பாளையம் விஜயலெட்சுமி நகரைச் சேர்ந்த பழனிச்சாமி மகள் தமிழ்செல்வி(17) பிளஸ் –1 படிக்கும் தமிழ்செல்வியை காணவில்லை என புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 370. | 3.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை யு.சி.மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் டேனியல், ஜெயக்குமார், அருண்பாண்டியன், மூர்த்தி, ஜெயராஜ், ஐந்துபேரும் | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சரியாக படிக்காததால் பெற்றோர் கண்டித்தனர். மனமுடைந்த மாணவர்கள் ரயில் மூலம் வெளியூர் செல்ல முயற்சி. மதுரை ரயில்வே நிலையத்தில் நின்றிருந்தவர்களை காவலர்கள் மீட்டு பெற்றோரிடம் ஒப்படைத்தனர். | | |
| 371. | 3.2.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை பெசன்ட் நகர், ஆல்காட் குப்பம், பஜனை கோவில் தெருவைச் சேர்ந்த கனகலிங்கம் மகள் திவ்யா(21) எம்.ஜி.ஆர்., ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பி.காம்., கம்ப்யூட்டர் சயின்ஸ் மூன்றாம் ஆண்டு படித்து வந்தார். உடன் படித்த அனுராதா பணம் காணாமல் போனதால் பேராசிரியர்கள், சுதா(26), விஜயலெட்சுமி(36), செல்வி(31), ஜெயலெட்சுமி ஆகியோர் திவ்யாவை நிர்வாணப்படுத்தி சோதனை செய்ததால் மனமுடைந்த திவ்யா வீட்டில் தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |
| 372. | 3.2.2011 | **சென்னை மாவட்டம்:** தொழிலாளர் நலத்துறை சார்பில் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு இறப்புக்குப் பின் வழங்கப்பட்ட இயற்கை மரண நிதி உதவியில் முறைகேடு நடைபெற்றதாக புகார். | லஞ்சம் | தினமணி |
| 373. | 3.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை எஸ்.எம்.பி. காலனியில் வசிப்பவர் நல்லம்மாள்(86) மகன் பிரபு. நல்லம்மாளின் மகன் சாப்பாடு போடாமல் அறையில் பூட்டி கொடுமைபடுத்தியதாக நல்லம்மாள் நீதிபதி ரத்னராஜிடம் மனு. | முதியவர்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 374. | 3.2.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** நாகர்கோவில் ஈத்தாமொழி காவல் நிலையத்திற்கு வரும் வாதி, பிரதிவாதிகளை மிரட்டி லஞ்சம் வாங்குவது, அப்பாவிகள் மீது பொய் வழக்கு பதிவு செய்வது தகாத வார்த்தைகளால் திட்டுவது என மக்கள் விரோத நடவடிக்கைகளை | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேற்கொள்ளும் ஈத்தாமொழி காவலர்களை எதிர்த்து சிபிஎம் சார்பில் தர்ணா போராட்டம். | | |
| 375. | 3.2.2011 | **விருதுநகர் மாவட்டம்:** நரிக்குடி ஒன்றியத்தில் தாமரைக்குளம் கிராமத்தில் வசிக்கும் தலித் மக்கள் வீடுகளுக்கு பஞ்சாயத்து தலைவியின் கணவர் சுந்தரின் தூண்டுதலின் பேரில் ஆதிக்கச் சாதியினர் தலித் வீடுகள் மீது தீ வைத்து கொளுத்தியதாக பாதிக்கப்பட்டவர்கள் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 376. | 3.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை கருப்பாயூரணியைச் சேர்ந்த ஜமால் முகமது மகள் பர்ஜானா பேகம்(18). கல்லூரிக்கு சென்ற பர்ஜானா பேகத்தைக் காணவில்லை என பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 377. | 3.2.2011 | **மதுரை மாவட்டம்:** பட்டுக்கோட்டையை சேர்ந்த ராமநாதன் மனைவி முனீஸ்வரி(29). கணவர் மற்றும் அவரது உறவினர்கள் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக முனீஸ்வரி புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரட்சணைக் கொடுமை | தினகரன் |
| 378. | 3.2.2011 | **தர்மபுரி மாவட்டம்:** தர்மபுரி ஏரியூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் ரமேஷ், குமார், இருவரும் பள்ளி நேரத்தில் மது குடிக்க செல்வது வழக்கம். மது அருந்திவிட்டு வந்து மாணவர்களுக்கு பாடம் எடுக்கும் அவலநிலை. | வகுப்பறை வன்முறை & ஆசிரியர்கள் மது அருந்திவிட்டு வந்து வகுப்பு நடத்தும் நிலை | தினகரன் |
| 379. | 3.2.2011 | **தேனி மாவட்டம்:** தேனி, கம்பம், கூடலூர் வழியாக கேரளாவிற்கு கடத்த முயன்ற 100 கிலோ ரேசன் அரிசி பறிமுதல். டிரைவர்கள் லியாகத் அலி, அனீஸ் இருவர் கைது. | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |
| 380. | 3.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** தேவகோட்டை சருகணிரோட்டில் டாஸ்மாக் கடை சோதனை செய்ய சென்ற எஸ்ஐ மீனாட்சிசுந்தரம், மற்றும் ஏட்டு ராமசந்திரனுக்கும் வக்கீல் சந்திரபோசுக்கும் இடையே மோதல். வழக்கறிஞர்களைத் தாக்கிய | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காவலர்களை பொதுமக்கள் தாக்கியதாக புகார். | | |
| 381. | 4.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி வள்ளுவர் நகரைச் சேர்ந்த கலைச்செல்வி(43) மகள் புஷ்பாவுக்கும்(21) சுரேஷ்(28)க்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டது. இந்நிலையில் புஷ்பாவின் சகோதரன் லோகேஷின் நண்பன் கோபி புஷ்பாவை கடத்திச் செல்லும்போது தடுக்க வந்த சுரேஷ் மற்றும் கலைச்செல்வியை கோபி அரிவாளால் வெட்டிவிட்டு புஷ்பாவை கடத்திச் சென்றதாக கலைச்செல்வி கோபி மீது புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 382. | 4.2.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை மேலவாக்கம் அரசு மேல்நிலைப்பள்ளியில் மதிய உணவு திட்டம், அமுல்படுத்ததால், அந்தப் பகுதியில் உள்ள சாய்பாபா கோயிலில் அன்னதானமாக வழங்கப்பட்ட சாப்பாடு வாங்க மாணவர்கள் ஒரு கிலோ மீட்டர் நடந்து செல்லும் அவல நிலை. | வகுப்பறை வன்முறை | தினமலர் |
| 383. | 4.2.2011 | **மதுரை மாவட்டம்:** யா. ஒத்தக்கடை புதுதாமரைப்பட்டியைச் சேர்ந்த பிரபாகரன் மகன் அமர்நாத்தை அதே பகுதியைச் சேர்ந்த கருப்பு, சத்தி டுவிலரில் கடத்த முயற்சி. சுங்கசாவடி அருகே தப்பி வந்த அமர்நாத் குறித்து பிரபாகரன் புகார் கொடுத்தும் காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கவில்லை. புகார் கொடுத்தற்காக ஊராட்சி மன்றத் தலைவர் விஜயகுமார் மிரட்டுவதாக பிரபாகரன் நீதிமன்றத்தில் மனு தாக்கல். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 384. | 4.2.2011 | **செங்கல்பட்டு மாவட்டம்:** மதுராந்தகம் அடுத்த மொரப்பாக்கம் ஊராட்சிக்கு தமிழக அரசு 964 இலவச டிவிக்களை வழங்கியது. ஆனால் அவற்றில் 21 டிவிக்களை ஊராட்சி மன்ற தலைவி மஞ்சுளா சங்கர் தனக்கு சொந்தமான சிமெண்ட் குடோனில் பதுக்கி வைத்ததாக பொதுமக்கள் புகார். | ஊழல் | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| 385. | 4.2.2011 | **சென்னை மாவட்டம்:** அபிராமபுரம் காவல் நிலையத்தில் ஏட்டாக பணிபுரிபவர் முத்தழகன்(48) தனது வீட்டிற்கு மின் இணைப்பு கேட்டு மின்வாரிய உதவி பொறியாளர் பாஸ்கரன்(50)னை அணுகினார். அவர் ரூ.3,200 லஞ்சம் கேட்டதாக முத்தழகன் புகார். | லஞ்சம் | தினத்தந்தி |
| 386. | 4.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை சர்வேயர் காலனியை அடுத்த எஸ்.கொடிக்குளத்தைச் சேர்ந்த குமார் மனைவி மணிமொழி இருவரும் தங்கள் நிலத்தை பார்த்துவிட்டு திரும்பும் வழியில் மற்றொரு மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்த மர்ம நபர்கள் குமாரை தாக்கிவிட்டு மணிமொழியின் நகைகளை பறித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 387. | 4.2.2011 | **சேலம் மாவட்டம்:** கோவை மேட்டுப்பாளையம் அருகில் கல்லார் என்ற இடத்தை சேர்ந்த ஷாகிலா ரயில்வேக்கு சொந்தமான இடம் அருகில் உள்ள தனது இடத்தில் வீடு கட்ட தடையில்லா சான்று கேட்டு சேலம் ரெயில்வே கோட்டத்தில் கட்டுமான பிரிவு அலுவலகத்தில் கண்காணிப்பு பொறியாளராக வேலை பார்க்கும் லதா(47)வை அணுகினார். அவர் ரூபாய் 4 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக ஷாகிலா புகார். | லஞ்சம் | தினத்தந்தி |
| 388. | 4.2.2011 | **சென்னை மாவட்டம்:** எண்ணூர் தாழங்குப்பம் பகுதியைச் சேர்ந்த சாதிக் பாட்ஷா(42) மனைவி மெகருன்னிசா(37). மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டு சாதிக் பாட்ஷா மனைவி மீது மண்ணெண்ணெய் ஊற்றி கொளுத்தியதாக சாதிக் பாட்ஷா மீது மெகருன்னிசா புகார். மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி மெகருன்னிசா மரணம். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |